1990 ஏப்ரல் 25]

30 சதவிகிதம் லெவி தருகிறோம் என்று ஏற்றுக்கொண்டார்கள். குறுவைக்கு 50,000 மெட்ரிக் டன்னும், சம்பாவுக்கு 2 இலட்சம் மெட்ரிக் டன்னும் தருவதாக அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். பத்திரிகைகளிலே செய்திகள் வெளி வந்திருக்கின்றன. அதற்குப் பின்னாலேயும், ஒத்துக்கொண்ட இலக்கை அவர்கள் கொடுக்க மறுத்ததன் காரணத்தாலேதான், வேறு வழியில்லாத சூழ்நிலையில் மத்திய அரசு 30 சதவிகிதத்திலிருந்து 50 சதவீகிதமாக உயர்த்த வேண்டுமென்று வலியுறுத்தியதின் காரணமாகவும், மற்றொரு புறம் வியாபாரிகள் அவர்கள் வாக்கைக் காப்பாற்றாத சூழ்நிலையில் அரசு இந்த முடிவை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு அவர்களால் ஆளாக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காட்டாறுகளின் குறுக்கே படுக்கை அணை கட்டுதல்.

*3021. திரு. கா. அண்ணாதுரை :

பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) பட்டுக்கோட்டைப் பகுதியில் ஓடக்கூடிய காட்டாறுகளின் குறுக்கே படுக்கை அணைகளைக் கட்டித் தண்ணீரைத் தேக்கிப் பாசனத்திற்குப் பயன்படுத்துகிற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பட்டுக் கோட்டை தொகுதியில் பட்டுக்கோட்டை தாலுக்காவிலுள்ள மங்களகாடு கிராம எல்லையில் நசுவினியாற்றின் குறுக்கே ரூ. 38.80 லட்சம் செலவில் ஒரு அணை கட்டப்பட்டு வருகிறது. இது தவிர கீழ்க்கண்ட திட்டங்கள் ஆய்வில் உள்ளன.

1. கருப்பூர் கிராமத்தில் கருப்பேரிக்குப் பாயும் வகையில் பட்டுவனர்ச்சி ஓடையின் குறுக்கே படுக்கை அணை கட்டுதல்.

2. பெரியகோட்டை கிராமத்தில் கண்ணனாற்றின் குறுக்கே படுக்கை அணை கட்டுதல்.

3. சொக்கனவூர் கிராமத்தில் கண்ணனாற்றின் குறுக்கே படுக்கை அணை கட்டுதல்.

திரு. கா. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பட்டுக்கோட்டை தொகுதியிலே 3 படுக்கை அணைகளைக் கட்டுகிற செயற்குறிப்பு

அரசின் பரிசீலனையில் உள்ளதென்று சொன்னார்கள். இதிலே முக்கியமாக கண்ணன் ஆற்றின் குறுக்கே கட்டப்பட இருக்கும் படுக்கை அணையினால் ஏறத்தாழ 30,000 ஏக்கர்களுக்குமேலே பாசனம் பெறக்கூடிய வகையிலே வாய்ப்பு உள்ளது. காவிரி பொய்த்த நிலையில் இதிலிருந்து லிப்ட் இர்ரிகேஷன் முறையில் 12 ஆம் நெம்பர் வடவார் வாய்க்கால் பாசன ஆதாரத்திற்கும் வாய்ப்பு இந்தப் படுக்கை அணையிலிருந்து இருப்பதால், இதை விரைவுபடுத்தி, 1986–87-ல் திட்ட மதிப்பீடு தலைமைப் பொறி யாளர் (ஆய்வு) அவர்களுக்கு அனுப்பப்பட்டிருப்பதால், இதை விரைவுபடுத்த அமைச்சரவர்கள் முன்வருவார்களா ?

**மாண்பு**மிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இது குறித்து மாவட்ட ஆட்சியாளருடைய இசைவு எதிர்பார்க் கப்படுகிறது. அந்த இசைவு கிடைத்தவுடன் நில நிர்வாக ஆணையாளரின் பரிந்துரைக்குப்பின் உரிய நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. கா. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கைக்குப் பின்னாலே முடிவு எடுக்கப்படுமென்று சொல்லுகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரும், நானும் கடந்த இரண்டு மாதங் களுக்கு முன்னாலே அந்தப் படுக்கை அணை அமைய இருக்கிற இடத்தைச் சென்று பார்வையிட்ட நேரத்தில், கடந்த கால ஆட்சியில் 1986–87-ல் அனுப்பப்பட்ட திட்ட மதிப்பீட்டுக்குப் புறம்பாக வேறு ஒரு இடத்திலே ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர் களுக்கு. . . .

**மாண்பு**மிகு பேரவைத் தலைவர் : குற்றச்சாட்டைத் தவிர்க் கவும்.

9-55 மணி.

திரு. கா. அண்ணாதுரை : ஒரு படுக்கை அணை மதிப்பீட்டில் இருக்கிறது என்று இடத்தைக் காண்பித்தார்கள். அது மிகக் குறைந்த அளவுக்கு 100 ஏக்கர் பாசனம்கூட இருக்காது. நானும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் அதை மாற்றி 1986–87 திட்ட மதிப்பீட்டில் இருக்கக்கூடிய 30 ஆயிரம் ஏக்கருக்கு மேல் பாசனம் பெறக்கூடிய அந்தப் படுக்கை அணைதான் தேவை; அதைத்தான் அரசுக்குப் பரிந்துரை செய்யவேண்டும் என்று குறிப் பிட்டு இருக்கிறோம். அந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரை, துறைக்கு வந்து இருக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, நாம் பெரிதாக அணை கட்ட வேண்டும் என்று நினைக்கிறோம். ஆனால், நாம் நினைப்பதற்கு ஏற்ற வகையில் அணை கட்டப்

படுவதில்லை. அதைப் பொறியாளர்கள் ஆய்வு செய்து, எத்தனை ஆண்டுக் காலமாக எவ்வளவு நீர் ஓடுகிறது, எவ்வளவு மழை பொழியும், எவ்வளவு நீர் நிற்கும், அது நின்றால் எத்தனை ஏக்கருக்குப் பாசன வசதி கிடைக்கும்; அப்படிப் பாசனத்தைப் பெற்றால் எவ்வளவு உணவு உற்பத்தி கிடைக்கும் என்ற எக்கனாமிக் ரிப்போர்ட்--அதை எல்லாம் கணக்குப் போட்டுப் பார்த்து இந்தந்த இடத்தில் இந்த அணைதான் கட்டலாம் என்று அவர்கள் ஒரு ஆய்வு அறிக்கை தருகிறார்கள். நம்முடைய கண்ணுக்கு அதை இன்னும் பெரியதாகக் கட்டலாம் என்று தோன்றலாம். நாம் நேரடியாகப் பார்ப்பதற்கும், கேமிரா விலே பார்ப்பதற்கும் வித்தியாசம் உண்டு என்று சொல்வார்கள், சினிமா பாஷையிலே. அப்படி நம்முடைய கண்ணுக்கு வேறாகவும் பொறியாளர்களுடைய கண்ணுக்கு வேறாகவும் தெரியும். எது எப்படி இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை நான் கவனத்திலே கொண்டு இருக்கிறேன். ஆய்வு அறிக்கை வரட்டும்.

குளங்களை நவீனப்படுத்துதல்.

*3323—திரு. ஆச்சியூர் எம். மணி :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) உலகவங்கி நிதி உதவித் திட்டத்தின்கீழ் திருக்குரங்குடி, களக்காடு, நாங்குநேரி, விஜயநாராயணம், வள்ளியூர், மூலைக்கரைப்பட்டி, ஈத்தா மொழி பகுதியிலுள்ள குளங்களை நவீனப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. துரைமுருகன்** : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாட்டிலுள்ள பாசனக் கண்மாய்களை நவீனப்படுத்துவதற்காக உலக வங்கியிடம் கடன் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கடைசியில் அந்த உலக வங்கியினுடைய குழு தமிழ்நாட்டுக்கு வந்து ஆய்வு செய்தபின் சில கண்மாய்களை மட்டும்தான் முதற்கண் முன்னோடித் திட்டமாக சீர்படுத்த எடுத்துக் கொள்ளலாம் என்று பரிந்துரைசெய்தது. அதைப் பற்றி அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

**திருமதி ரமணி நல்லதம்பி**: மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நாங்குநேரியைச் சேர்ந்த விஜய நாராயணம், வள்ளியூர், திருக்குரங்குடி பகுதிகளைச் சேர்ந்த குளங்கள் எல்லாம் நீண்ட காலமாக பழுது பார்க்கப்படாத காரணத்தால் தூர்ந்த நிலையில் காணப்படுகின்றன. மழை இல்லாமல் அவை மிகவும் வறண்டு காணப்படுகிற காரணத்தால்